# தோகை மயில் காஞ்சி

நல்லுலகில் காஞ்சி ஒரு பழமையான நகரம். கல்வியில் சிறந்ததோர் காஞ்சி என்னும் வழக்குச் சொல்லிலிருந்தே இந்நகரின் பெருமை புரியும். கி.மு இரண்டாம் நூற்றாண்டில் பதஞ்சலி முனிவர் தனது சமஸ்கிருத நூலான மாபாடியத்தில் காஞ்சிப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். “கல்வியில் கரையில்லாத காஞ்சி” எனத் திருநாவுக்கரசரும், “நகரேஷி காஞ்சி” என்று வடநாட்டு கவிஞரான மகாகவி காளிதாசரும் புகழும் அளவிற்கு சிறப்பு பொருந்திய நகரமாக விளங்கியது. புஷ்பேசு ஜாதி, புருஷேசு விஷ்ணு, நாரீஷீ ரம்பா, நகரேஷி காஞ்சி என்பது ஒரு சமஸ்கிருத ஸ்லோகம். அதாவது, புஷ்பங்களில் சிறந்தது ஜாதி முல்லை, புருஷர்களில் பெரியவர் மகா விஷ்ணு, பெண்களில் சிறந்தவர் ரம்பா, நகரங்களில் சிறந்தது காஞ்சி என்பது இதன் பொருள்.

பல்லவ மன்னர்களின் தலைநகரமாக விளங்கிய காஞ்சி மாநகரத்தை பல்லவர்கள் பல்லவேந்திரபுரி என்று அழைத்துள்ளனர். காஞ்சிபுரமானது கஞ்சி, கஞ்சிபுரம், காஞ்சீ, காஞ்சிபுரம், காஞ்சீவரம், காஞ்சி மாநகர், காஞ்சிநாடு, கச்சி, அத்தியூர், திருஅத்தியூர், கச்சிப்பேடு, சிவகாஞ்சி, விஷ்ணுகாஞ்சி,கச்சியம்பதி, சின்னக்காஞ்சி, பெரியகாஞ்சி, காஞ்சீபுரி, காமபீடம், தபோமயம், பல்லவேந்திரபுரி, புத்தக்காஞ்சி, ஜினகாஞ்சி, விண்டுபுரம், சிவபுரம், சருவசித்திகரம், கன்னிக்காப்பு, ஆதிபடம், சத்தியவிரதஷேத்ரம் எனப் பல பெயர்களால் அழைக்கப்பட்டு தற்போது காஞ்சிபுரம் என்ற பெயரே நிலைத்து நிற்கிறது.

சங்க இலக்கியமான பெரும்பாணாற்றுப்படையில் காஞ்சிபுரமானது, “கச்சிமூதூர்” என்று குறிப்பிடப்பட்டுள்ளது. தனிப்பாடல் ஒன்று காஞ்சிபுரத்தை மயில் போல அமைந்த ஊர் என்று விவரிக்கிறது.

**“ஏரியிரண்டும் சிறகா எயில் வயிறா**
**காடுடைய பீலி கடிகாவா – நீர்வண்ணன்**
**அத்தியூர் வாயா அணிமயிலே போன்றதே**
**பொற்றேரோன் கச்சிப் பொலிவு”**

காஞ்சியில் ஏரி, கோட்டை, சேலை மற்றும் அத்தியூர் என்ற நான்கு பகுதிகளை இணைத்து காஞ்சியின் அமைப்பானது மயில் போல இருந்தது என புலவர் விவரிக்கிறார். காஞ்சியின் இருபுறமும் அமைந்திருந்த ஏரியானது மயிலின் சிறகைப் போலவும், கோட்டை மதிலின் சுவரானது மயிலின் வயிறு போலவும், அடர்த்தியான காடானது மயிலின் தோகையைப் போலவும், அத்தியூரான சின்னகாஞ்சியானது மயிலின் தலை போல இருந்ததாகவும் பாடி காஞ்சியை, “தோகை மயில்” என்று குறிப்பிட்டுள்ளார்.

காஞ்சிபுரத்தில் உள்ள 12 கோயில்களை யுனஸ்கோ உலகின் பாரம்பரிய சின்னங்களின் முதல் தேர்வு பட்டியலில் சேர்த்துள்ளது. இந்த செய்தியை இந்திய அஞ்சல் துறை காஞ்சியின் கலாச்சார பாரம்பரிய தடயங்களை நீர் வண்ண ஓவியங்களாக வரைந்து அஞ்சல் அட்டையாக தயாரித்துள்ளது. காஞ்சி கைலாசநாதர், காமாட்சியம்மன், வரதராஜபெருமாள், வைகுந்தப்பெருமாள், ஏகாம்பரேஷ்வரர் கோயில்கள், நடவாவிக் கிணறு, மாமண்டூர் குகைக்கோயில் ஆகியவை அஞ்சல் அட்டையின் அடையாளங்களாக மாற்றப்பட்டன. நானூறு

ஆண்டுகள் பழமையான முதுகலையான நாட்டுப்புறக் கலைகள் சர்.சி.பி.இராமசாமி ஐயர் அவர்கள் வாழ்ந்த வீடு அருங்காட்சியகமாக அமைக்கப்பட்டுள்ளது. இங்கு பழங்காலப் பொருட்களான பாரம்பரிய ஓவியம், இசைக்கருவிகள், விளக்குகள், கற்சிலைகள், பட்டு பருத்தி மற்றும் கைத்தறி உடைகள், நகை மற்றும் உள்நாட்டுப் புத்தகங்கள் இங்கு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. காஞ்சி மாநகரில் இரண்டு முக்கிய மசூதிகள் அமைந்துள்ளன. ஜமாமஸ்ஜித் என அழைக்கப்படுகிறது.

ஸ்ரீ வரதராஜர் கோயில் என பிரபலமாக அறியப்படும் ஸ்ரீ தேவராஜ சுவாமி திருக்கோயில் காஞ்சி மாநகரின் கிழக்கு மூலையில் அமைந்துள்ளது. இக்கோயில் 108 திவ்ய தேசங்களில் ஒன்றாகும். வரதராஜர் என்றவுடனே நம் நினைவுக்கு வருவது ஸ்ரீ அத்தி வரதரே ஆவார்.

**“நீண்டதோர் காலமாக நீரினுள் மூழ்கி நின்று**
**காண்பவர் வியக்கும் வண்ணம் கரை வந்த**
**வரதன் தன்னை**
**மாண்புகழ் கொண்ட காஞ்சி மைந்தர்கள்**
**வணங்கும் நாளில்**
**ஈண்டுலந்தின் இன்பமுற்றேன் இறைவனின்**
**செயலேயன்றோ!”** என்று அத்தி வரதரை கவியரசு கண்ணதாசன் தன் கவிதை வரிகளில் பக்தி நயத்தோடு புகழ்ந்துரைக்கிறார்.

காஞ்சிபுரம் என்றதும் அனைவரது நினைவுக்கும் வருவது இந்த ஊரின் பட்டுப்புடவைகள் தானே? இந்த ஊருக்கு சில்க் சிட்டி அதாவது பட்டு நகரம் என்ற பெயரை ஈட்டித் தந்த பெருமையும் பெண்மணிகள் உள்ளம் கவர்ந்த இந்த காஞ்சிபுரம் பட்டுக்கு உண்டு. தொழில் நுட்பம் பெரிதும் வளர்ந்துள்ள இந்த நவீன யுகத்திலும், இயந்திரங்களின் பயன்பாடின்றி, கைத்தறியில் மட்டுமே நெய்யப்படும் சிறப்பு கொண்டவை காஞ்சிபுரம் பட்டுப் புடவைகள். **ஜியோ கிராபிகல் இன்டிகேஷன் டேக்** என்ற தரம் தொடர்பான சர்வதேச சான்றிதழ் பெறும் முதல் இந்திய தயாரிப்பு காஞ்சிப் பட்டுப் புடவைகள்தான் என்பது நம் தமிழ்நாடே பெருமைகொள்ள வேண்டிய செய்தி.

காஞ்சிபுரம் ஆயிரம் கோயில் நகரம் என்றழைக்கப்படும் நகரமாகும். இது பஞ்ச பூதங்களில் ஒன்றாக விளங்குகிறது.

**“திருவாரூரில் பிறக்க முக்தி**
**காஞ்சியில் வாழ முக்தி**
**காசியில் இறக்க முக்தி**
**திருவண்ணாமலையை நினைக்க முக்தி**” – என்ற வரிகளின் மூலம் கோயில் நகரம், சிற்ப நகரம் மற்றும் பட்டு நகரமான காஞ்சியின் புராண, ஆன்மீக, கட்டிட மற்றும் சிற்பக் கலை சிறப்புகள் அனைத்தையும் நேரில் கண்டு அற்புத நகரம் தரும் அனுபவங்களை மகிழ்ந்து போற்றுவோம்.

**ரேணுகா பிரபாகரன். எம்.காம்,எம்.ஏ,பி.எட்.,**
**தமிழாசிரியர்,**
**எஸ்.எஸ்.கே.வி. மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி,**
**காஞ்சிபுரம். அலைபேசி எண். 99946 92603.**